**<u>STARTING TIME 12.01 P.M</u>**

**<u>IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.</u>**

**<u>O.S. No. 19/2019</u>**

Deposition of **<u>D.W.1</u>** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Mallika, Junior assistant of this court, on 29.10.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : **ஜெயராமன்** | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.</u>**

**6. இவ்வழக்கின் வாதி தட்சணாமூர்த்தி என் உறவினர் என்றால் சரிதான். வாதியின் தாயார் எனது சித்தப்பா மகள் என்றால் சரிதான். நான் தாவா சொத்தில் எந்த வருடம் வீடு கட்டினேன் என்றால், 2010 ல் தை மாதம் வீடு கட்ட ஆரம்பித்து 2013 ல் முடித்து, மின் இணைப்பு பெற்றேன். வீட்டின் 4 பக்க அளவு என்னவென்றால் கிழக்கு மேற்கு இருபுறமும் 22 அடியிலும் வடக்கு தெற்கு 36 அடியிலும் வீடு கட்டி உள்ளேன். வீடு ஒரே தளமா இரு தளமா என்றால் ஒரு தளம் ஆகும்.**

**7. 2010 ல் தை மாதம் வீடு கட்ட ஆரம்பித்து 2013 ல் முடித்து, மின் இணைப்பு பெற்றதாக எனது பதிலுரையில் சொல்லி உள்ளேனா என்றால், சொல்லி உள்ளேன். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதி என்மீது சோளிங்கர்**

காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்தாரா என்றால் கொடுக்கவில்லை. வாதி தரப்பில் புகார் கொடுத்ததற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளதை மறுத்து எனது பதிலுரையில் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் கொடுத்தது உண்மைதான் என்றும் அங்கு விசாரித்து, இது உரிமையியல் சம்பந்தமான பிரச்சனை என்பதால் நீதிமன்றம் மூலம் பார்த்து கொள்ளுமாறு போலிசார் கூறவிட்டார் என்றால் சரியல்ல, போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

8. எனக்கும் வாதியின் தகப்பனாருக்கும் ஏற்கனவே தகராறு இருந்ததா என்றால் இல்லை. கொடுக்கல் வாங்கல் தகராறு இருந்ததா என்றால் இல்லை. என் வீட்டை கட்டும் போது மேஸ்திரி வைத்து கட்டினேனா அல்லது நானே கட்டினேனா என்றால் நானே தான் கட்டினேன். யார் மூலம் கட்டினேன் என்றால் சோளிங்கரை சேர்ந்த பூபதி என்பவர் மூலம் கட்டினேன். வீட்டிற்கான மின் ஒயரிங் வேலை யார் செய்தது என்றால், வெங்கப்பட்டுவை சேர்ந்த முனுசாமி என்பவர் மூலம் செய்தேன். மேற்படி இருவரையும் என்தரப்பில் சாட்சியாக விசாரிக்க உள்ளேனா என்றால் விசாரிப்பேன்.

9. எனது பதிலுரையில் கே.பி.சந்தாகிருஷ்ணன் என்பவருக்கு பார்த்தசாரதி மற்றும் நரசிம்மன் என்ற இரு மகன்களை தவிர வேறு வாரிசுகளும் உள்ளதாக கூறியுள்ளேன் என்றால், சரிதான். அதை நிரூபிக்க முடியுமா என்றால் அவர்கள் வெளியூரில் உள்ளார்கள், அதனால் அவர்களை அழைத்து வந்து நிரூபிக்க முடியாது. தாவா சொத்தில் நான் வீடு கட்டியதாகவும், மின் ஒயரிங் வேலை செய்ததாக சொல்வது பொய் என்றும், வீடு கட்டியதும், மின் ஒயரிங் வேலை செய்ததும் வாதியும் அவரது தகப்பனார் மட்டும் தான் என்றால் சரியல்ல.

10. எங்களுக்கும், வாதியின் தகப்பனாருக்கும் இருந்த முன் விரோதம் காரணமாக கடந்த 23.01.2014 அன்று நாங்கள் தாவா சொத்தில் அத்துமீறி

ஆக்கிரமிப்பு செய்து விட்டோம் என்றால், சரியல்ல. எனது பதிலுரையில் தாவா சொத்தின் அடிமனையின் மதிப்பு 6 லட்சம் என்றும், கட்டிடத்தின் மதிப்பு 8 லட்சம் என்றும் சொல்லி உள்ளதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

11. பாராஞ்சி கிராமத்தில் எனக்கு வேறு ஒரு வீடு இருக்கிறதா என்றால் தாவா சொத்து தவிர வேறு வீடு எதுவும் இல்லை. பாராஞ்சி எனக்கு வேறு ஒரு வீடு உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள மாடி வீடு கட்டுவதற்கு முன்பு அந்த இடத்தில் என்ன இருந்தது என்றால் எனது தந்தையார் 1966 ல் வாங்கும் போது நாட்டு தட்டோடு வீடு இடிந்து காலி மனையாக இருந்தது.

12. நாட்டு தட்டோடு வீடு எந்த வருடம் இடிந்தது என்றால் அந்த வீடு இடிந்த நிலையில் இருந்தபோதுதான் எனது தந்தையார் வாங்கினார். இடிந்து போன வீட்டிற்கு வீட்டு வரி ரசீது வாங்குவார்களா என்றால் வாங்கமாட்டார்கள். 2013 ம் ஆண்டு தான் வீடு கட்டி முடித்தேன் என்று சொல்லும் நிலையில் வரி ரசீதுகள் என்னால் வழக்கிற்காக வேண்டி தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. அந்த மாதிரி மோசடியாக தயாரிக்கப்பட்ட வீட்டு வரி ரசீதுகளை கொண்டு மின் இணைப்பு பெற்றேன் என்றால் சரியல்ல.

13. நான் தாவா சொத்தில் சட்ட விரோதமான அனுபவத்தில் இருந்து வருகிறேன் என்றும், தாவா சொத்தை என் தகப்பனார் கிரையம் பெற்றதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனவே, தாவா சொத்தை நாங்கள் சட்ட விரோதமாக அனுபவித்து வருவதால், வாதி தாவாவில் கோரியுள்ள நஷ்ட ஈட்டை கொடுக்கவும் நான் கடமைபட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனவே தாவா சொத்தில இருந்து காலி செய்து வாதியின் வசம் சுவாதீனம் ஒப்படைக்க வேண்டும் என்றால் சரியல்ல.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

**ENDING TIME 12.33.P.M.**

**Sd./ G.YUVARAJ.**
**SPECIAL SUBORDINATE JUDGE,**
**ARAKKONAM**